திருக்குர்ஆன் வந்தவரலாறு

சேக்கோ

335

17 NOV 1954
MADRAS



மலர்ப் பதிப்பக வெளியீ

கோடிக்கணக்கான மக்கள் உபயோகித்து
குணமறிந்த ஒப்புயர்வற்ற ஔடதம்,

குல்ஷபா
இரத்த சுத்தி லேகியம்.

இரத்தத்திலுள்ள சகல கெடுதல்களையும் நீக்கி, இரத்தத்தை சுத்தி செய்து, இரத்த விர்த்தியை அதிகரித்து, மலச்சிக்கலைப்போக்கி, ஜீரண சக்தியை உண்டாக்கி, நரம்புகளுக்கு பலமளித்து, இந்திரியத்தை கெட்டிப்படுத்தும். பாலியத்தில் ஏற்படும் நரையை நீக்கும். பித்த வாய்வு, பித்த வாய்வினால் சப்தத்துடன் வரும் ஏப்பத்தையும் போக்கும். சோகை பித்த பாண்டு முதலிய வியாதிகள் "சூரியனைக் கண்ட பனிபோல்" நீங்கும். பெண்களுக்கு மாதவிடாய் சரியான காலத்தில் ஆகாமல் இருந்தாலும், அளவுக்கு மிஞ்சி அதிகமாக வந்தாலும் அதையும் குணப்படுத்தும். நாள்பட்ட தலைவலி, இருமல், வாய்வு சம்மந்தப்பட்ட சகல வியாதிகளையும் குணப்படுத்தி வலிமையும், வனப்பும் தந்து இளமை வளர்க்கும் ஆண், பெண், குழந்தைகளனைவரும் யாதொரு பத்தியமுமின்றி எந்தக் காலத்திலும் சாப்பிடலாம். சாப்பிடுவதற்கு ருசிகரமாயிருக்கும்

——: உபயோகிக்கும் விதம் லேகியத்துடன் வரும் :——

10-நாள் 20-வேளை சாப்பிடக்கூடிய லேகியடின் 1க்கு ரூ. 2/-

பூரணகுணமடைய 4-டின்கள் சாப்பிடவேண்டும்.
இதர மருந்துகள் அடங்கிய விரிவான கேட்லாக்
வேண்டுவோருக்கு இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

N.B. இந்த லேகியத்தில் எந்த விதமான விஷ சம்மந்தப்பட்ட சரக்குகளும் சேர்க்கப்படவில்லை என்று உத்திரவாதமளிக்கின்றோம்,

1டின் முதல் 2டின் வரை V. P. தபால் சார்ஜ ரூ. 1—2—0
3டின் முதல் 4டின் வரை V. P. தபால் சார்ஜ ரூ. 1-12—0

தயாரிப்பவர்:

டாக்டர் ஜி. எஸ். அமீனதீன் எம். டீ. எம். எஸ்.
ஹோமியோ கிளினிக்,
ரயில்வேஸ்டேஷன் ரோடு, கும்பகோணம். (S இந்தியா)

அறிவு மலர் 13. இதழ்கள் 1000.

திருக்குர்ஆன் வந்த வரலாறு!

※

ஆசிரியர்:

ஷேக்கோ

※

(இப்புத்தகத்தின் விற்பனைத் தொகை அனைத்தும் புதிதாகக் கட்டப்போகும் கோவிந்தகுடி பள்ளிவாசல் கட்டிட நிதிக்கு அளிக்கப்படும்.)

வெளியிட்டு விற்பது:

அறிவுமலர்ப் பதிப்பகம்,

கோவிந்தகுடி, P. O. (Via) கும்பகோணம்.

தென் இந்தியா.

உரிமைபதிவு] 1—11—1954. [விலை அணா 3

காணிக்கை

தமிழக (முஸ்லிம்) மக்களைத்தட்டி எழுப்பிய, தனிப்பெருமைக்குரிய "தாருல் இஸ்லாம்" ஆசிரியப்பெரியார் அல்ஹாஜ் பா. தாவூத்ஷா B.A., அவர்களுக்கு

சமர்ப்பிக்கிறேன்

பாரதி அச்சகம், குடந்தை.

மதிப்புரை

"திருக்குர்ஆன் வந்த வரலாறு!" என்ற இச்சிறிய நூல் பொதுவாக முஸ்லிம்களுக்கும், சிறப்பாக முஸ்லிமல்லாதார்களுக்கும் நல்ல பயன் தரும் என்று கூறுவது மிகையாகாது.

"அணுகுண்டு சகாப்தத்தில் வாழும் நாம் ஆண்டவனைப் பற்றி நினைப்பது அர்த்தமற்ற செயல்" என்று எண்ணி இறுமாந்திருக்கும் இளைஞர் உலகிலே அன்பர் "ஷேக்கோ" போன்ற இளம் எழுத்தாளர்கள் ஆத்மீக அறவாழ்விற்கு வழிவகுக்க வீறுகொண்டு எழவேண்டும். ஆசிரியர் "ஷேக்கோ"வின் இம்முயற்சி பெரிதும் பாராட்டுதற்குரியதே.

"அறமழிந்து மறம் வளர்ந்த முன்காலங்களிலே ஆண்டவன் அறம் வளர்க்க தன்னருள் பெற்ற தூதர்களை பரந்துகிடந்த மக்கள் கூட்டத்தினூடே அவ்வப்போது அனுப்பியே வந்தான். கடைசியாக முழுதும் நிறைவு பெற்ற "திருக்குர்ஆன்" திருமறையை மனித வர்க்கத்தின் மாணிக்கமாக இன்றும் ஜொலிக்கும் மஹான் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மூலம் அருளினன்.

ஆசிரியர் இந்த வரலாற்றை இரத்தின சுருக்கமாக இந்நூலில் கூறுகிறார். நிலநூல் ஆராய்ச்சியுடன் தொடங்கிய இந்நூல் மனிதவர்க்கத்தின் இறுதி மறையான திருக்குர்ஆன் வந்த வரலாற்றுடன் முடிவு பெறுகிறது.

"குர்ஆன் வந்த வரலாற்றைப் பற்றி, இன்னும் விரிவான முறையில் விளக்கம் செய்து கொண்டேபோனல் இச்சிறு ஏடு இடம் கொள்ளாது. குர்ஆனின் மகத்துவத்தைப் பற்றி பக்கம் பக்கமாக எழுத முடியும். எனினும், என்னுடைய அற்புதமோ குர்ஆனக இருக்கிறது; மேலும் இந்த அற்புதம் என்றென்றும் நிலைத்து நிற்கும்; இந்த நபி[illegible]ன் நாயக வாக்கியம் ஒன்றே போதும் குர்ஆனின் சிறப்பை விளக்க!" என ஆசிரியரே தம் நூலில் குறிப்பிடுகிறார். தமிழக முஸ்லிம்களின் நல்ல வரவேற்பை இந்நூல் பெறும் என நம்புகிறேன்.

ஆலூர்
10—10—'54 } M. ராஜ்முஹம்மது B. A.,

எங்களிடம் கிடைக்கும் நூல்களில் சில.	ரூ.	அ.
குல்ஹமீத் (துப்பறியும் நாவல்) திருச்சி, ரசூல்.	2	0
நீலாபுரிக் கோட்டைமர்மம் (II) S. M. S. பீர்முகம்மது	2	10
கற்காலத்திலிருந்து தற்காலம் வரை ந. இஸ்மத் பாஷா	2	4
கற்காலத் தமிழர்கள் (ஆராய்ச்சி நாவல்) ,,	1	4
சம்மதமா ? (முஸ்லிம் சிறுகதை) V. நூர்முஹம்மது	1	0
ஈத் முபாரக் ! ,, திருச்சி, ரசூல்	0	12
வாழ்வுப் போராட்டம் (சிறு கதை) ந. இஸ்மத் பாஷா	1	0
இதயக் குமுறல் (கவிதை) கவிஞர் சாரண பாஸ்கரன்	1	4
LIGHT OF DIVINITY (Poet Sarana Baskaran)	0	8
இறைவன் இல்லை ? (ஆராய்ச்சி) ஷேக்கோ	0	8
மதம் அவசியமா ? ,, ,,	0	6
இஸ்லாமிய தமிழ்ப் புலவர் மதனீ	0	6
வீழ்ந்த வெள்ளிகள் (காதல் காவியம்) மதிதாசன்	0	6
இனிக்கும் இசைகள் ,,	0	5
நாசக்காரி ? (நாடகம்) மு. அப்துல் ரஹீம்	0	5
எண்ணக் குவியல் கவிஞர் மதிதாசன்	0	4
என்ன விநோதம் பார் ! மதனீ—ரசூல்	0	4
இதோ உங்கள் ஊழியர்கள் ,,	0	4
ஏழைகளை சிரிக்கவைத்த ஸ்டாலின் C N. A. & மு.க.	0	4
லீக் தலைவர் ஒழிக? மதனீ	0	3
நேயர் விருப்பம் A. M. A. ரஹீம்	0	3
திருக்குர்ஆன் வந்த வரலாறு ஷேக்கோ	0	3
தப்லீக் இயக்கத்தை தடைசெய்க? மதனீ	0	2
இஸ்லாமிய இசைகள் ஆஜாத்	0	2

மேலும் பல புத்தகங்களும் கிடைக்கும்

கேட்லாக் - வியாபாரக் கமிஷன் உண்டு.

விவரங்களுக்கு:

அறிவு மலர்ப் பதிப்பகம்,

கோவிந்தகுடி P. O. :: (via.) கும்பகோணம்.

வெளிநாட்டில்:

ஓரியண்டல் நியூஸ் மார்ட்,

கெய்ஸர் ஸ்ட்ரீட், கொழும்பு. 11 (சிலோன்.)

தி சௌத் இந்தியா புக் டெப்போ,

326, மொஹல் ஸ்ட்ரீட், ரங்கூன் (பர்மா)

திருக்குர்ஆன் வந்த வரலாறு?

1-உலகம்

பரந்து, விரிந்து கிடக்கும் இப்பிரபஞ்சத்தைப் பார்க்கும்போது, இப்பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன், இப்பூபாகம்-நிலபாகம்-என்னவாக இருந்திருக்கும்?- என்ற ஒரு வியப்பான கேள்வி, நம் உள்ளத்தில் தோன்றுமல் தோன்றுகிறது!

மனிதன், பிறப்பதற்குமுன் அவன் என்னவாக இருந்திருப்பான்?- என்று நம்மை நாமே கேட்டுப் பார்த்துக் கொண்டால், மனிதன் பிறப்பதற்கு முன், ரத்தமாக இருந்து, அது மாறி விந்தாகி, அதுவும் மாறி மனித உருவாகிறது - என்ற விடை கிடைக்கிறது. அதுபோல, இந்நிலபாகம் தோன்றுவதற்குமுன், அது என்னவாக இருந்திருக்கும்?

விஞ்ஞான ரீதியாக இந்த உலகம் ஒரு கிரகம் என்றுதான் தெரிகிறது. ✸ அந்தப் பிரச்னை இங்கு தேவை இல்லை. உலகமாகிய - நிலபாகம் முதலில் எப்படி இருந்தது? என்பதுதான் நாம் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயம். அதைத் தெரிந்து கொண்டால், பிறகு மனிதனைப்பற்றியும், அவனுக்குவந்த வேதம் பற்றியும், பிறகு குர்ஆன் வந்த வரலாறு பற்றியும் விளக்கமாகப் புரிந்து கொள்ளலாம். ஒன்றைப் பற்றிய வரலாறு தெரிய, அதன் ஆரம்பகால-மூலகாரணத்திலிருந்தேதான் நாம் ஆராயவேண்டியிருக்கிறது.

✸ மதம் அவசியமா? என்ற எமது நூலால் விளக்கப்பட்டுள்ளது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்கள், "ஆதியில் என்ன இருந்தது?" என்று நபி (ஸல்) அவர்களிடம் கேட்டபோது,

"ஆதியில் ஆண்டவன் மட்டுமே இருந்தான்; அவனுடன் ஒன்றுமில்லை. மேலும் அவன் தன்னுடைய மாட்சிமைக்குரிய சிம்மாசனத்தை - ஆட்சியை - நீரின்மேல் நிறுவினன். மற்றவை யெல்லாம் அவனுடைய நினைவு ஸ்தானத்தில் இருந்தன"

என்று நபி (ஸல்) அவர்கள் விடையளித்தார்கள்.

இந்த நாயக வாக்கியத்தை வைத்து, சற்று நேரம் சிந்தித்துப் பார்த்தால், "இன்று நிலப்பரப்பாக இருக்கும்-உலகமாகப் பரிணமித்துப்போயிருக்கும் இடம், ஆதியில் நிலமாக உலகம் உண்டாக்கப்படுவதற்கு முந்திய காலத்தில்-நீர் மயமாகத்தான் இருந்திருக்கும்!" என்ற ஒரு முடிவுக்குத் தான் வரத் தூண்டுகிறது. உலகம் உண்டாக்கப்படுவதற்கு முந்திய நிலையில், இந்த நிலப்பரப்பு முழுவதுமே வெறும் நீராகத்தான் இருந்திருக்கும் என்ற நம்பிக்கையை அளிக்கிறது. இதை உறுதிப்படுத்த பல அத்தாட்சிகளும் இருக்கின்றன.

பூகோள சாஸ்திரக் கணிப்புப்படி, இந்த உலக அளவில் மூன்றில் ஒருபங்குதான் நிலமாக இருப்பதாகவும், மற்ற பாகம் முழுவதும் நீராகவே இருப்பதாகவும் முடிவு கட்டப் பட்டிருக்கிறது. அதாவது சுமார் 560 லக்ஷம் சதுர மைல்கள் விஸ்தீரணத்துக்குத் தரை வியாபித்திருக்கிறது. ஆனல் தண்ணீரோ, சமுத்திர ரூபங்களில் 1410 லக்ஷம் சதுர மைல்கள் வியாபித்திருக்கிறது.

இந்தக்கணிப்புப்படி, நாம் சற்று சிந்தித்தால், "இன்றிருக்கும் மூன்றில் ஒரு பங்கு நிலப்பரப்பும் கூட ஆதியில் வெறும் நீராகத்தான் இருந்திருக்கவேண்டும்; அதை இறைவன், மனித வர்க்கத்திற்காக ஒரு சிறு பகுதியை-மூன்றில் ஒரு பகுதியை-நிலமாக மாற்றி இருக்கக்கூடும்"

என்று முடிவு கட்டத்தான் தோன்றுகிறது. இப்படிப் பார்க்கையில், ஆதியில் அகிலம் முழுவதுமே நீராகத்தான் இருந்திருக்கும் என்று நம்பித்தான் தீரவேண்டியிருக்கிறது.

பல காலத்திற்கு முன்பு, இப்பொழுது இமயமலை இருக்கும் இடத்தில், ஒரு சமுத்திரமும், அச்சமுத்திரத்திற்கு வடக்கிலும், தெற்கிலும், நிலப்பாகங்களும் இருந்தனவாம். அப்படி இருந்தகாலத்தில், திடீரென்று ஏற்பட்ட ஏதோஒரு அழுத்தும் சக்தியினால் சமுத்திரம் இருந்தபாகம் பிரமாண்டமான மடிப்புக்களுடன் உயரமாக எழும்பி அச்சமுத்திரம்-நீர்-இல்லாமலே மறைந்து, அதற்குப் பதிலாக இமயமலை உண்டாகி விட்டதாம். இது பூகோள சாஸ்திரம் கூறும் விஷயம்.

இச் சான்றை வைத்துச் சிந்திக்கும்போது கூட, இப்பொழுது நிலமாகவும், மலைகளாகவும் இருக்கும் பாகங்களெல்லாம், ஆதிகாலத்தில் நீராகத்தான் இருந்திருக்கும் என்ற நம்பிக்கையைத்தான் அளிக்கிறது.

இந்த விஷயத்தை உறுதிப்படுத்த-ஆதியில், இன்றைய நிலப்பரப்பு முழுவதும் நீர்ப்பரப்பாகவே இருந்திருக்கும் என்ற விஷயத்தை ஊர்ஜிதப்படுத்த – விஞ்ஞானிகளின் கருத்துக்களும் நமக்கு உதவியாகின்றன. இன்று நிலமாக இருக்கும் பாகத்தின் கீழே-நிலபாகத்திற்கு அடிபாகத்தில்-இன்னும் தண்ணீர் இருக்கத்தான் செய்கிறதாக விஞ்ஞானிகள் கண்டிருக்கிறார்கள்.

இன்றைய பூமியின் - நிலப்பரப்பின் அடிபாகம் - உட்பாகம்-நீர்போன்ற திரவரூபமாக இருப்பதாக, இரு அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டறிந்திருக்கிறார்கள். இவ்விரு விஞ்ஞானிகளும் வேலைசெய்யும் கொலம்பியா பல்கலைக் கழகத்தின் தரை ஆராய்ச்சிப்பிரிவில், நில அதிர்ச்சிகாட்டும் கருவி எனப்படும் - Seismograph - ஒன்று புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளதாம் ஜப்பானுக்கு வடகிழக்கே, ரஷ்யர்

வாழும் 'காம்சட்கா' என்றஇடத்தில், சமீபத்தில் ஏற்பட்ட கடுமையான பூமியதிர்ச்சியின்போது, அந்த அதிர்ச்சி அலை கள் உலகத்தை எட்டு முறை சுற்றியபின்பும், கொலம்பியா பல்கலைக்கழக அதிர்ச்சிகாட்டும் கருவி, அவ்வலைகளைக் காட்டிக்கொண்டே இருந்ததாம். அந்த பூமியதிர்ச்சியில் ஒன்றின் கீழ் ஒன்ருக பதினைந்து அதிர்ச்சி அலைகள் உலகத்தைச் சுற்றி வந்தனவாம். எல்லாவற்றிற்கும் கீழுள்ள அலை, பூமியின் உட்பாகத்தைத் தொட்டுக்கொண்டு போயிருக்க வேண்டுமென்றும், அது - பூமிக்குகீழுள்ள - நீர் போன்ற பொருளைத்தான் தொட்டுக்கொண்டு போயிருக்க வேண்டுமென்றும் அவ்விஞ்ஞானிகள் கூறுகின்ருர்கள்.

இவ்விஷயத்தை வைத்துப் பார்க்கும்போது நமக்கு என்ன தோன்றுகிறதெனில் "ஆதியில் நீராக இருந்தபாகம், இன்று நிலமாக மாறிவிட்ட போதும், நிலப்பரப்புக்குக் கீழே இன்னும் நீர் இருக்கிறது போலும்," என்றே அபிப் பிராயப்படச் செய்கிறது.

இவைகளின் மூலமாகவெல்லாம் யோசித்துப் பார்த் தால், இப்பிரபஞ்சம் - இப்பூபாகம்-தோன்றுவதற்கு முன்பு தண்ணீராகவே இருந்திருக்கவேண்டும் என்றே நம்பிக்கைக் கொள்ளச் செய்கிறது!

தண்ணீராக இருந்தஇடத்தில், சொற்ப பாகம் மட்டும் நிலமாக மாறக்காரணமென்ன? - இறைவன், தன் ஆட்சியை நீரின் மீது நிறுவியிருந்ததாக மேலே கண்டோம். அப்படி இருந்தபோது, மனிதவர்க்கத்தைப் படைக்க எண்ணி, அந்த நீர்ப் பாகத்தில் மூன்றில் ஒரு பகுதியை நிலமாக மாற்றியிருக்கக்கூடும்! - என்று எண்ண இடமிருக்கிறது.

———

2-மனிதன்.

மனிதவர்க்கத்தைப் படைத்து, தண்ணீர் மயமாக இருந்த பகுதியிலிருந்து ஒரு சிறிதளவை நிலமாகமாற்றி அந்த மனிதவர்க்கத்திற்கு அளித்து வாழவைக்க வேண்டு மென்ற எண்ணம் இறைவனுக்கு ஏன் தோன்றிற்று? என்ற மற்ருெரு கேள்வி தாஞகவே உதிக்கிறது.

"நான் மறைவான பொக்கிஷம் போல் இருந்தேன், என்னை அறிவித்துக் கொள்ள நாடினேன். ஆதலால் நான் மனிதனைப் படைத்தேன்."

என்று இறைவன் கூறுவதாக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிருர்கள். இந்த வாக்கியங்களின்படி பார்க்கும் போது இறைவன் தான் மறைவான பொருளாக இருந்து வந்ததை வெளிப்படையாக்கி, தன்னை அறியச் செய்ய வேண்டுமென்று கருதினன்; எனவே, உலகத்தைத் தோற்றுவித்தான்! மற்றும் கோடானகோடிப் பொருள்களையும் உற்பத்தியாக்கினன்! பிறகு, மனிதனைப் படைத்தான்! என்று அறிந்து கொள்வதற்கு இடமிருக்கிறது.

மனித வர்க்கம் வந்த வரலாற்றைப் பார்ப்போம்.

உலகத்தின் பிரதி நிதியாக மனிதர்களை நியமிக்கக் கருதிய இறைவன் முதன் முதலாக, '**ஆதம் (நபி)**' என்பாரைச் சிருஷ்டித்தான். அவருக்குத் துணைவியாக, '**ஹவ்வா**' என்ற பெண்மணியை அவரிலிருந்தே உண்டாக்கி, அவ்விருவரையும் ஒன்று சேர்த்து வைத்தான். பிறகு அவ்விருவருக்கும் அறியாதவற்றையெல்லாம் அறிவித்துக்கொடுத்து, ஏக தெய்வக் கொள்கையையும் படிப்பித்துத் தந்தான்.

அந்த இருவரிலிருந்தே ஜனப்பெருக்கம் ஏற்பட்டது. சந்ததிகள் பெருக்கெடுத்து, ஜனக்கூட்டம் அதிகரிக்கத்

தொடங்கியது. ஜனங்கள் பெருகப் பெருக அவர்கள் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று வாழவேண்டியதாயிற்று. இப்படிப் பிரிந்து சென்று வாழத்தொடங்கிய ஜனங்கள் தங்கள் நடையுடை, பாவனை, பாஷை எல்லாவற்றையுமே புதிது புதிதாக மாற்றிக்கொள்ளத் தலைப்பட்டார்கள்.

இந்தப் புதுமையான போக்குகளினால், அவர்களது ஏக தெய்வக்கொள்கை குலைந்து, கண்டதையெல்லாம் கடவுளாகப்பாவித்துவணங்கத்தலைப்பட்டார்கள். இதற்கப்புறம், அனாச்சாரமே அவர்களது தொழிலாகப்போய்விட்டது.

ஏக தெய்வக் கொள்கையை நிலைநாட்ட வேண்டி, கெட்டலைந்து, கண்டபடி அனாச்சாரத்தில் உழன்று வந்த மக்களைச்சீர் திருத்துவான் வேண்டி, அப்போதைக்கப்போது ஆங்காங்கே, இறைவன் தனது தூதர்களாக அம்மக்களிலிருந்தே சிறந்தவொருவரைத் தேர்ந்தெடுத்து, தனது சீர்திருத்தக் கொள்கைகளை தேர்ந்தெடுக்கப்பட்ட தூதர்களின் மூலமாக, அந்த அனாச்சார மக்களுக்கு உபதேசம் செய்விக்கும்படியாயிற்று.

இந்தச் சீர்திருத்தப் பிரச்சாரத்திற்காக வேண்டியே இப்ராஹீம் நபி, தாவூத் நபி, மூஸாநபி, ஈஸாநபி ஆகிய பல தூதர்களையும், தாவூத் நபி மூலமாக சபூர் வேதம், மூஸா நபி மூலமாக தவ்ராத் வேதம், ஈஸா நபி மூலமாக இன்ஜீல் வேதம்-போன்ற பல வேதங்களையும், அப்போதைக்கப்போது ஆங்காங்குள்ள அனாச்சார மக்களுக்கு இறைவன் அனுப்பி வைத்தான்.

இப்படியே, இறைவன் அக்கால அனாச்சாரகர்களையெல்லாம், தமது தூதர்களையும், வேதங்களையும் கொண்டு நல்வழிக்குத் திருப்பினான்.

"அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும், நம்முடைய தூதர்கள் வராத எந்த வகுப்பினரும் பூமியில் இருக்கவில்லை" குர்ஆன்-35:24.

என்ற இறை மொழியைக் கொண்டுபார்த்தால், உலகத்தி லுள்ள எல்லா மக்களுக்குமே இறைவனின் தூதரும், வேதமும் அருளப்பட்டு - சீர்திருத்தப்பட்டே-இருக்கின்றன என்றே தெளிவாகிறது

இந் நபிமார்களுக்குப் பின்பு தோன்றிய மக்களும் ஏக தெய்வக்கொள்கையைக் கைவிட்டு விட்டு, கண்டதே காட்சி, கல்லெல்லாம் சாமி என்ற ரீதியில்தான் தவறி நடக்க ஆரம்பித்தார்கள். இப்படி வழிவழியாக வந்த அனுச்சாரர்கள், அராபியாவில் மிதமாகத் தலையெடுக்க ஆரம் பித்தார்கள். தீமையான காரியம் எதெது உள்ளனவோ அவை யெல்லாவற்றையும், அந்த அராபிய மக்கள் கை கொண்டு, மனிதர்களல்லாத மிருகங்களைப் போல் வாழ்ந்து வந்தார்கள். ஆகவே, அந்த அராபியர்களுக்கும், இறை வன் தன் தூதரை அனுப்பிச் சீர்திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இறுதித் தூதராக ஒருவரையும், இறுதி வேதமாக ஒருவேதத்தையும், அம் மக்களுக்கு அளித்து, அத்தூதரை யும், அவ்வேதத்தையும் கொண்டே அம்மக்களும், அவர் களுக்குப்பின்வரும் மக்களும் நல் வாழ்வு பெறவேண்டு மென்ற நோக்கத்தில், இறைவன், ஒரு அதியற்புத வேதத் தையும், தூதரையும் அனுப்ப முனைந்தான்!

அதற்கு முன்பு அளிக்கப்பட்ட சபூர், தவ்ருத், இன் ஜீல் போன்ற வேதங்களெல்லாம், அக்கால மக்களின் நிலை குத் தக்கபடியே அமைந்திருந்தாலும், சரியான முறை யில் பாதுகாத்து வைக்கப்படாததாலும், அவை, பின்வந்த சந்ததிகளுக்கு ஒத்ததாக இல்லாமல், மாறுபட்டு திருத்தப் பட்டு, குறைக்கப்பட்டு பல விதங்களில் வீணாகி விட்டன.

இந்த தவறுகளுக்கெல்லாம் உள்ளாகாததாகவும், இனி உலகம் உள்ளளவும் உள்ளதாகவும் இருக்கும்அளவுக்கு ஒரு

வேதத்தை அளிக்கப்பட வேண்டியதே சாலச்சிறந்ததென இறைவன் கருதினுன் போலும்! அதை ஏற்று, நல்ல முறையில் பலன் காணும்படி செய்யத் தக்கதொரு தூதரையும் தேர்ந்தெடுத்தான்!

இந்த ஏற்பாட்டின்படி, அனுச்சாரம் தலை விரித்தாடிக் கொண்டிருந்த அராபியாவிலே 'பாரான்' என்ற ஸ்தலத்திலே கி.பி. 570-ம்ஆண்டில், குறைஷி குலத்தில் **அப்துல்லா** என்ற ஒரு பெரியாருக்கும், **ஆமீனு** என்ற ஒரு அம்மையாருக்கும் ஒரு ஆண் குழந்தையை ஜனனமாக்கினுன். ஆண்டவன்! அக் குழந்தையே, பிற்காலத்தில், **முஹம்மது நபி (ஸல்)** அவர்களாகப் பரிணமித்தார்கள்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு முன்பே அவர்களின் தந்தையாகிய அப்துல்லா காலமாகி விட்டார். நபி (ஸல்) அவர்கள் பிறந்த ஆறும் பிராயத்தில், அவர்களது தாயாரும் காலமாகி விட்டார். பிறகு அவர்களது பாட்டனுராகிய அப்துல்முத்தலிப் என்பவரிடம் நபி (ஸல்) அவர்கள் அடைக்கலமானுர்கள். பாட்டனுரின் பராமரிப்பில் இரண்டு ஆண்டுகள் இருந்து வந்தார்கள். பின்னர், பாட்டனுரும் காலமாகி விட்டார். அதன்பிறகு, தமது எட்டாவது வயதில் பெரிய தந்தையாகிய அபுதாலிப் என்பவரிடம் நபி (ஸல்) அவர்கள் ஒப்படைக்கப்பட்டார்கள்.

எட்டு வயது இளைஞராகிய முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பெற்ருேரற்ற அனுதையாக பெரிய தந்தையின் பராமரிப்பில் வளர்ந்து வரவேண்டியதாயிற்று. பெரிய தந்தையின் பரிபாலனத்தில், நபி (ஸல்) அவர்கள் எந்தவிதக் கல்வியறிவும் கற்றுக்கொள்ள வசதியின்றி, ஆடு மேய்க்கும் இடையரேபோல் தொண்டு புரிந்து வந்தார்கள்!

பிறகு தமது, 25-ம் பிராயத்தில், பெரிய தந்தை அபுதாலிப்அவர்களின் அனுமதியின் மூலம் பணக்காரவிதவைப்

பெண்ணாகிய **கதீஜா** என்ற அம்மையாரிடம் வியாபாரத்தைக் கவனிக்கும் தொழிலில் அமர்ந்தார்கள். அதன் மூலம், நபி (ஸல்) அவர்கள் அம்மாதின் நன்னம்பிக்கைக்குரிய நல்ல மனிதராக நடந்து கொண்டதால், அம்மாது அவர்களே, நபி (ஸல்) அவர்களை மணம் செய்து கொள்ள முன் வந்தார்கள். அதன்படி, நபி (ஸல்) அவர்கள் 42 வயது பெற்ற விதவையான கதீஜா பிராட்டியாரை மணம் செய்து கொண்டார்கள் !

அதன் பிறகு நபி (ஸல்) அவர்கள் இவ்வுலக விஷயங்களில் கவனம் செலுத்துவதை விட்டு விட்டு, இறைவனை தியானம் செய்வதிலேயே ஈடுபடலானார்கள். தமது வாழ்நாளில் பெரும் பகுதியை ஏகாந்தத்தில் இருந்து இறைவனை வணங்குவதிலும், தியானம் செய்வதிலுமே செலவு செய்யத் தலைப்பட்டார்கள்.

மக்கா நகருக்கருகிலுள்ள **ஹிரா** என்ற மலைக்குகையில் தனித்திருந்து தவம் புரிந்து வந்தார்கள். அல்லும், பகலும் ஆண்டவனை ஸ்தோத்தரித்து, அதுவேதமது கடமை என எண்ணி கடுந்தவம் புரிந்து வந்தார்கள். இறுதியில் ஆண்டவனருளால், தமது நாற்பதாவது வயதில் நபிப் பட்டம் கிடைக்கப்பெற்றார்கள் ! ஹிரா குகையிலிருந்து ஆண்டவனே சதம் என்று தவம் புரிந்து, நோன்பு நோற்று தியானம் செய்து வந்ததால், ஒரு நாள் இரவில் ஹிராகுகையில் நபி (ஸல்) அவர்களுக்கு தேவஞான ஒளி கிடைக்கப் பெற்றது !

★ ★ ★

3. வேதம்

உலகத்தை படைத்து, மனிதனை அதன் பிரதிநிதியாக அனுப்பி, அவனுக்கு ஒழுங்கான வாழ்க்கைத் திட்டங்களை வகுத்துக்கொடுக்க தூதர்களையும், வேதங்களையும்

இறைவன் அனுப்பி உதவியதாகப் பார்த்தோம். இனி, முடிவில் என்றும் நின்று நிலவத்தக்கதொரு அருட் கொடையாக வழங்கப்பட்ட இறுதி வேதமாகிய குர்ஆன் வந்த வரலாற்றை, உள்ளச்சத்தோடு படித்துப்பார்த்தால், நம் உள்ளம் உண்மையிலேயே ஏதோ ஒரு விவரிக்க முடியாத உணர்ச்சிக் குள்ளாகிறது!

"ஆதம், தம்முடைய உயிருக்கும், உடலுக்கும் இடையில் இருந்தபோது நான் ஆண்டவனுடைய தூதனாக நியமனம் பெற்றேன்! நான் ஆண்டவனருகில் இருந்தபோது ஆதம் தம்முடைய களிமண் நிலையில் இருந்தார்!"

இந்த நபிகள் நாயக வாக்கியங்களைச்சற்று தீவிரமாகச் சிந்தித்துப் பார்த்தால், இறுதி வேதத்துக்குரிய இறுதித் தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் மகத்தான மேன்மை எத்தகையது என்று எளிதில் விளங்கிவிடும்.

மேன்மைக்குரிய முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஹிரா குகையில் இருந்து இறைவனை தியானம் புரிந்துவந்த காலத்தில், ஒரு ரமலான்மதத்திய லைலத்துல்கத்ர் இரவிலே நபியவர்களுக்குரிய வஹி - Revelation-வானவர் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் மூலமாக முதன் முதலாக இறங்கியது

"இன்னும், வஹியைக் கொண்டே, அல்லது திரைக் குப்பின்னிருந்தே, அல்லது வானவத்தூதர் ஒருவரைக் கொண்டே தனது அனுமதி கொண்டு தான் நாடியதை வஹியறிவிப்பதே யல்லாமல், (வேறுவழியில்) அல்லாஹ் அ(டிய)வனுடன் பேசக் கூடுமென்பது எந்த மனிதனுக்கும் உரித்தாக இல்லை"—குர்ஆன் - 42:51

வஹியறிவிப்பதைப்பற்றி இறைவன் கூறும் விளக்கம் இதுவாக இருக்கிறது. இந்த இறைமொழிப்படி 'வஹியைக் கொண்டே' என்ற முதல் நிலைக்குரிய பொருள் என்னவென்றால், தான் நாடியவருடைய உள்ளத்தில், இறைவன்,

திடீரென்று விஷயங்களை 'உதிக்கும்'படி செய்வதாக இருக்கிறது. அடுத்தபடியாக "திரைக்குப்பின்னிருந்தே" என்பதன் கருத்தைக்கவனித்தால், திரைக்குப்பின்னால் - மறைவாக இருந்து ஒருவர் பேசுவதுபோல சப்தம் கிளம்புவதாக இருக்கிறது. இந்த நிலையில், கனவுகாணுவதுபோல் கூடவும் வஹி அறிவிக்கப்படுவதுமுண்டாம். கடைசி முறையான "வானவத்தூதரொருவரைக்கொண்டே" என்பதைக் கவனித்தால் வானவர் ஜிப்ராயீல் (அலை) அவர்களை, தாம் அறிவிக்கவேண்டிய விஷயங்களைக்கொண்டு, தாம் நாடியவரிடம் தூதாக அனுப்பி நேரடியாகப் பேசுவதைப்போல், இறைவன் வஹியறிவித்து வைப்பதாக இருக்கிறது. இந்த மூன்றும் வகையான வஹிக்கு **'வஹியேமத்லுவ்'** என்று பெயர் கூறப்படுகிறது.

இந்த 'வஹியே மத்லுவ்' என்னும் முறையில்தான், நபி (ஸல்) அவர்களுக்கு வேதவாக்கியங்கள் அருளப்பட்டன. நபி (ஸல்) அவர்கள் ஹிராகுகையில் தவம்புரிந்து வந்த காலத்தில் ஒரு ரமலான் மாதம் லைலத்துல் கத்ர் இரவிலே வானவர் ஜிப்ராயீல் (அலை) அவர்கள், நபி(ஸல்) அவர்கள் பால் வந்து, 'ஓதுவீராக' என்று கூறினார்கள். அந்தச்சப்தத்தைக் கேட்ட நபியவர்கள் பிரமித்துப்போய், ஒன்றும் தோன்றாமல், "நான் ஓதத்தெரியாதவனாயிற்றே" என்று பதிலளித்தார்கள். பிறகு மறுபடியும் ஜிப்ராயீல் (அலை) அவர்கள், சற்று அதிகமான சப்தத்துடன் 'ஓதுவீராக' என்று கூறி, நபி (ஸல்) அவர்களைப்பிடித்து அழுத்தி விட்டார்கள். அதற்கும், நபி (ஸல்) அவர்கள் 'நான் ஓதத்தெரியாதவனாயிற்றே' என்றே பதிலளித்தார்கள். பின்பும், ஜிப்ராயீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களைப் பிடித்துக் கடினமாக அழுத்தி விட்டு விட்டு 'ஓதுவீராக' என்று கூறினார்கள். அதன் பின்பு நபி (ஸல்) அவர்கள் மிகவும் சிரமப்பட்டுப்போய், "நான் ஓதத்தெரியாதவனாயிற்றே (எப்படி ஓதுவது?)" என்று கூறினார்கள். கடைசியில் ஜிப்ராயீல்(அலை) அவர்கள் மூன்றும் முறையாகவும், நபி (ஸல்) அவர்களைப்பிடித்துக் கடினமாக அழுத்தி விட்டு விட்டு:

67959

'சிருஷ்டித்த உமதிறைவனின் திருநாமத்தைக்கொண்டு ஓதுவீராக; அவன் மனிதனை ரத்தக்கட்டியினின்றும் சிருஷ்டித்தான்; ஓதுவீராக! மேலும் உமதிறைவன் மிக்கக் கண்ய முள்ளவன்; அவனே எழுதுகோலைக் கொண்டு எழுதக்கற்றுக்கொடுத்தான்: மேலும், அறியாதவற்றை யெல்லாம் அறிவித்துக் கொடுத்தான்"

என்ற திருவாக்கியங்களை ஓதிக்காட்டினார்கள். இவ்வாக்கியங்களைக் கேட்டுக் கொண்ட நபி(ஸல்) அவர்கள் மிக்க சிரமத்திற்குள்ளாகி, வீட்டுக்குச் சென்று தமது மனைவியாகிய கதீஜா அம்மையாரிடம், 'என்னைப் போர்த்துங்கள், என்னைப் போர்த்துங்கள்' என்று கூறினார்கள்.

மேற்கண்ட ஐந்து வாக்கியங்கள் தான் முதல் முதலாக நபியவர்களுக்கு அருளப்பட்ட குர்ஆன் வாக்கியங்களாகும்.

நபி (ஸல்) அவர்களுக்கு வஹிவரும் போதெல்லாம், அவர்களுக்கு மிக்க கஷ்டமாகவே இருந்து வந்தது. சில சமயங்களில் அவர்களுக்கு வஹிவரும்போது, வேர்த்துப் போய் நனைந்து விடுவார்களாம். சரீரம் கனத்துப்போய் விடுமாம்.

ஒரு சமயம், அவர்களுக்கு வஹிவந்தபோது அவர்கள் அனுபவித்ததை அவர்களது தோழராகிய 'ஜாபிர்' என்பவரிடம்:

"நான் வீதிவழியாக போய்க்கொண்டிருந்தபோது, வானத்திலிருந்து ஒரு குரலைக்கேட்டு என் கண்களை உயர்த்திப்பார்த்தேன். அப்பொழுது ஹிராகுகையில் அன்று என் முன்னே தோன்றிய அந்த வானவர் வானத்துக்கும், பூமிக்கும் நடுவே ஒரு சிம்மாசனத்தில் அமர்ந்துகொண்டிருந்தார். மேலும், அவரது நிமித்தமாக நான் பீதியடைந்து வீட்டுக்கு திரும்பி வந்து, "என்னைப் போர்த்துங்கள், என்னைப் போர்த்துங்கள்" என்று கூறினேன். பிறகு இறைவன் "ஏ ஆடை கொண்டு போர்த்துகிறவரே! எழுந்து சென்று

அச்ச மூட்டி எச்சரிக்கக் கடவீர். மேலும், உம்முடைய இறைவனை மகிமைப் படுத்தக்கடவீர். உம்முடைய உடைகளையும் சுத்தம்பண்ணிக் கொள்ளக் கடவீர்! மற்ற எல்லா அசுத்தங்களையும் ஒழித்து விடக்கடவீர்!" என்று வஹி இறக்கி வைத்தான். பிறகு வஹி அதிகமாகப் பெருகி அடுத்து அடுத்து வரத்தொடங்கிற்று "—புகாரி 1:1.

என்று கூறி இருக்கிறார்கள். இப்படியாக நபி (ஸல்) அவர்களுக்கு வஹி வந்தபோதெல்லாம் பலவாறான சிரமத்திற்குள்ளாகி, வேதவாக்கியங்களைக் கிரகித்துக்கொண்டு வந்தார்கள்!

மக்களின் தன்மைக்கும் தேவைக்கும் ஏற்றபடி, அவ்வப்போது தேவையான விஷயங்களுக்கு ஒத்தபடி, சிறிது சிறிதாக குர்ஆன் வாங்கியங்கள் அவ்வளவும், 23-ஆண்டுகளில் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்டன.

நபி (ஸல்) அவர்கள் மக்காவிலும், அதைச் சார்ந்த பகுதிகளிலும் வாழ்ந்து வந்த சமயத்தில் அருளப்பெற்ற குர்ஆன் வாக்கியங்களுக்கு **'மக்கீ'** என்றும், மதினாவிலும், அதைச்சார்ந்த பகுதிகளிலும் வாழ்ந்து வந்தகாலத்தில் அருளப்பெற்ற வாக்கியங்களுக்கு **'மதனீ'** என்றும் பெயர் கூறப்படுகின்றன.

23-ஆண்டுகளில் அருளப்பட்ட குர்ஆன் முழுவதையும், நபி(ஸல்) அவர்கள் 114 அத்தியாயங்களாக அமைக்கச் செய்தார்கள்.

நபி (ஸல்) அவர்களே இறுதி நபியாக இருந்ததாலும், குர்ஆன் ஷரீபே இறுதி வேதமாக வந்தாலும், அவ்வேதத்தை என்றென்றும் அழியாத்தன்மையுடையதாகவும், எந்தமாறுபாடும் ஏற்பட்டு விடாதவாறும் பாதுகாப்பாக்கி வைக்கவும், அவசியம் ஏற்பட்டது. எனவே, நபி (ஸல்) அவர்கள் குர்ஆன் வாக்கியங்கள் முழுவதையும், தங்களுக்கு

வஹி அறிவிக்கப்பட்ட உடனேயே, எழுத்து மூலமாகப் பதிவு பண்ணிவைக்கக் கருதினார்கள். அதன்படி தமது நெருங்கிய ஷஹாபாக்களான ஹஜ்ரத் அபூபக்கர், ஹஜ்ரத் உமர், ஹஜ்ரத் உஸ்மான், ஹஜ்ரத்அலி போன்றவர்களைக் கொண்டு அப்போதைக்கப்போது எழுதும்படியும் செய்து வந்தார்கள்.

அக்காலத்தில், இக்காலத்திலுள்ளபடி எழுதுவதற்கு காகிதம் இல்லாததால், தோல்துண்டு, பேரீச்சை மட்டை, எலும்பு, ஓடு முதலியவைகளிலேயே எழுதும் பழக்கமாக இருந்து வந்தது. எனவே, குர்ஆனும் மேற்கூறியவைகளிலேயே எழுதிவைக்கப்பட்டன.

இப்படிக் கண்டவைகளில் எழுதிவைக்கப்பட்ட முந்தியகால வேதங்களெல்லாம்மறைந்தும், ஒழிந்தும்,வார்த்தைகளும்,வாக்கியங்களும் மாறுபட்டும் போய்விட்டதறிந்த நபி (ஸல்) அவர்களுக்கு, குர்ஆன் ஷரீபுக்கும் அப்படிப்பட்ட பங்கம் ஏதும் ஏற்பட்டு விடுமோ என்ற பயம் ஏற்பட்டது. அதனால், நபி (ஸல்) அவர்கள் குர்ஆன் முழுவதையும் பக்காவான முறையில் பாதுகாத்துவைக்கக் கருதினார்கள். அதன்படி, குர்ஆன் முழுவதைம் மக்களின் மனதிலேயே பதித்து விடுவதே சரியானது என்றும் எண்ணினார்கள். அதற்காக தங்கள் ஷஹாபாக்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு குர்ஆன் முழுவதையும் மனப்பாடம் செய்யும்படி பயிற்சி அளித்தார்கள். குர்ஆன் முழுவதையும் சரியானபடி மனனம்செய்வதில் எந்தத்தவறும் ஏற்பட்டுவிடாதபடி நபி(ஸல்) அவர்கள் மிகவும் எச்சரிக்கையாகக்கவனித்து வந்தார்கள். இப்படியாக குர்ஆன் வாசகங்கள் முழுவதும் ஏராளமான மக்களின் மனதில் எழுதிவைக்கப்பட்டன. இந்த மகத்தான காரணத்தாலேயே :

"கல்வி ஞானமுடையோர்களின் இதயங்களில், குர்ஆனின் தெளிவான வசனங்கள் எழுதப்பட்டிருக்கின்றன" —குர்ஆன் 29:48.

என்று இறைவன்கூடக் கூறியிருக்கிறான்,

இந்தக்காரணத்தினாலும், "திருக்குர்ஆனை நாம் அருள் செய்தோம், (அதன்படியே) நாம் இதனை ரக்ஷித்து வருவோம்." என்ற இறை மொழியாலும், குர்ஆன் என்றென்றும் அழியாப்பொருளாகப் பாதுகாக்கப் பட்டு விட்டது. குர்ஆனின் எட்டுப்பிரதிகள் அழிந்து போய்விட்டாலும், அழிக்கப்பட்டு விட்டாலும், எண்ணற்ற மக்களின் இதயங்களில் எழுதப்பட்டுள்ள குர்ஆனை யாரா லும் அழிக்க முடியாது. அவர்களது உள்ளங்களிலிருந்து பீறிட்டெழும் குர்ஆன் வசனங்களைக்கொண்டு, எத்தனைப் பிரதிகள் வேண்டுமானாலும் தயாரித்துக் கொள்ளலாம். இந்த மகத்தான சக்தி, வேறு எந்த வேதத்துக்கும், எந்த காலத்திலும் அளிக்கப்பட்டதில்லை. குர் ஆன் ஷரீபுக்கு மட்டுமே இந்த தனிப்பட்ட சக்தி அமைந்திருக்கிறது!

இந்தவிதமாக குர்ஆன் சேகரிக்கப்பட்டு வந்தகாலத்தில் நபி (ஸல்) அவர்கள் தங்கள் கடைசி ஹஜ்ஜை நிறை வேற் றும் பொருட்டு, மக்கா சென்றிருந்தபோது குர்ஆனின் ஐந்தாவது அத்தியாயமாகிய "ஸூரேமாயிதா" என்னும் தலைப்பிலுள்ள

"இன்றைய தினம் நான் உங்களுக்கு உங்களுடைய மார்க்கத்தைப் பரிபூர்ணமாக்கி வைத்து, என் அருட் கொடையையும் உங்கள் மீது பூர்த்தியாக்கி வைத்து விட் டேன். உங்களுடைய (இந்தக் குர் ஆன் வேதத்தைக் கொண்ட) இஸ்லாம் மார்க்கத்தைப்பற்றியும், நான் திருப்தி யடைந்தேன்."—குர்ஆன்-5:3

என்ற மூன்றாவது வசனம் அருளப்பட்டது. இந்தக்கடைசி வசனம் அருளப்பெற்ற பிறகு, நபி (ஸல்) அவர்கள் இப் பூவுலகில் இரண்டு மாதமும், இருபத்தோரு நாட்கள் மட்டுமே உயிரோடிருந்தார்கள். அதன் பின்பு இறைவனடி எகிவிட்டார்கள்.

இப்படியாக வஹியின்மூலம் குர்ஆன் வேதம் அருளப் பட்டு, எழுதப்பட்டு, மனனம் செய்யப்பட்டு உலகில் என்றும் நின்று நிலவத்தக்கதாயிற்று.

குர்ஆன் வந்த வரலாறு பற்றி, இன்னும் விரிவான முறையில் விளக்கம் செய்து கொண்டே போனல், இச்சிறு ஏடு இடம் கொள்ளாது.

குர்ஆனின் மகத்துவத்தைப்பற்றி பக்கம் பக்கமாக எழுதமுடியும், எனினும்;

"ஆண்டவனுடைய மற்ற தூதர்களெல்லாம், தங்கள் தங்களுக்குரிய அற்புதங்களைப் பெற்றிருத்தார்கள். ஆனல் என்னுடைய அற்புதமோ குர்ஆனுக இருக்கிறது. மேலும் இந்த அற்புதம் என்றென்றும் நிலைத்து நிற்கும்"
இந்த நபிகள் நாயக வாக்கியம் ஒன்றே போதும், குர்ஆனின் சிறப்பை விளக்க!

நீங்கள் ஒருநாளைக்கு கால் மணி நேரமாகிலும் குர்ஆனை ஓதி, அதன் பொருளை உணருங்கள்! அரபியில் தெரியா விட்டால், தமிழ்மொழி பெயர்ப்பையாவது படித்துணருங்கள்!! பிறகு உங்கள் உள்ளத்தில் நிறைந்து கிடக்கும் இருள் நீங்கி, வெளிச்சம் பிரகாசித்து நாள் முழுவதும் மனத்திருப்தியடைந்து மகிழ்ச்சி கொள்வதைப் பிரத்தியக்ஷமாகக் காண்பீர்கள்!!!

67959

முற்றிற்று.

ஆசிரியர் ஷேக்கோ எழுதிய நூல்கள்.

"இறைவன்" "மதம்" இவைகளைப்பற்றி திருக்குர் ஆனுக்கும் விஞ்ஞானத்திற்கும் உள்ள ஒற்றுமைகளையும், வேற்றுமைகளையும் எடுத்துக்காட்டி, இனிய, எளிய நடை பாதையிலே ஒளிவிளக்கு ஏந்தி வழிகாட்டி அழைத்துச் செல்லுகிறூர் ஆசிரியர் ஷேக்கோ. ஒவ்வொருவரும் படித்துப்பயன்பெற வேண்டிய நூல்கள்.

இறைவன் இல்லை? **0—8—0**

மதிப்புரை அறிஞர் குலாம்.

மதம் அவசியமா? **0—6—0**

மதிப்புரை M. R. M. அப்துற் றஹீம், B.A.

கிடைக்குமிடம்:

அறிவு மலர்ப் பதிப்பகம் கோவிந்தகுடி P O., (Via) கும்பகோணம்

ரிஜிஸ்டர் நெ. 158298 ஸ்தாபிதம்-1860

வாஞ்சூர் K. S. & Co., வின்

மனோரா மார்க்

நாகூர் சோகை மருந்து

இந்த மருந்து இரத்தத்திலுள்ள சகல கெடுதல்களையும் நீக்கி, சோகை, முகம் வயிறு வீக்கங்கள், தீராத பாண்டு, கைகால் குடைதல், உள்ளங்கை, உள்ளங்கால்எரிவு, இடுப்புவலி, தலைவலி, மயக்கம், வயிற்றுவலி, ஈரல் குலைவலி, கை கால் கண் எரிச்சல், பலஹீனம் தீராத இளைப்பு, இருமல், நித்திரை இல்லாமல்நரம்புத்தளர்ச்சி, தொண்டைப் புகைச்சல், கிராணிப்போக்கு, பெண்களுக்கு மாதவிடாய் சரியான காலத்தில் ஆகாமல் இருந்தாலும், அளவிற்கு மிஞ்சி அதிகமாகுதலையும் குணப்படுத்தும். மேகநீர், துர் நீரையும் போக்கி, மலச்சிக்கலை நீக்கி கண்ணில் திடீரென ஏற்படும் மறைவையும் மாற்றி பசியையும் உண்டாக்கி காரணமின்றி விந்து நீர்த்துப்போய் வெளியாகுதலை தடைப் படுத்தி, நரம்புகளுக்கு பலம் கொடுத்து, பித்த வாயுவினால் கபத்துடன் உண்டாகும் எப்பத்தையும் போக்கி, இரத்த விருத்தியை உண்டாக்கும். ஆண்மையை அளிக்கும் இம் மருந்தை உபயோகித்து பூரண குணமடையுங்கள்.

10நாள் சாப்பிடக்கூடிய நாகூர் சோகை மருந்து

பெட்டி 1க்கு விலை அணா 6.

வியாதியஸ்தர்கள் தொடர்ச்சியாக

நான்கு பெட்டிகள் 40 நாள் சாப்பிடவேண்டும்.

N. B:- நாட்டிலே பல போலி மருந்து வியாபாரிகள் எங்களது டிரேட் மார்க்கைப் போலும், அட்டை பெட்டியைப் போலும் போட்டு பொதுமக்களை ஏமாற்றிவருவதால் அனைவரும் எங்கள் டிரேட்மார்க்கையும் ரிஜிஸ்டர் நம்பரையும் கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம், எங்கள் கம்பெனியில் தயாராகும் ரத்தவிருத்திக்கு இணையற்ற பித்தவாய்வு லேகியம் டின் 1க்கு ரூ 2/- மட்டும்தான். எங்கள் ஏஜண்ட் இல்லாத வெளியூர்களுக்கு V. P. P. மூலம் அனுப்பப்படும்.

தபால் செலவு தனி.

தயாரிப்பவர்கள் :- வாஞ்சூர் **K. S. & Co**,

49, மணிக்காரத்தெரு, கும்பகோணம்.

உயர்ந்த ரக ஜவுளி வகைகள்
மலிவான விலையில் கிடைக்குமிடம்

எம். அப்துல்லா,

ஜவுளி வியாபாரம்.

280, பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

எங்களிடம் மில், கைத்தறி, இங்கிலீஷ் ஜவுளி, பாம்பே ஸில்க், பார்டர் லினன், பார்டர் சாட்டின், நினன், ஜார்ஜட் சேலை, கடாவ் வாயில், லான் சீட்டி, ஷர்ட்டிங், கோட்டிங், வேஷ்டி, ஜமக்காளம், பெட்ஷீட், கொசுவலை, உல்லன் போர்வை, பனியன்களும் மற்றும் எல்லாவிதமான நூதன ஜவுளி ரகங்களும் சங்கு, பளையகாட் கைத்தறி கைலி தினுசுகளும், உயர்தர வெல்வெட், பர் முதலியவற்றைக் கொண்டு தயாரித்த தங்களுக்கிஷ்டமான பாஷன்களில் தொப்பிகளும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும் — அவசியம் ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

M. ABDULLA,

CLOTH MERCHANT,
280, BIG BAZAAR, KUMBAKONAM.

Printed at Bharathi Press. Kumbeswarar South. Kumbakonam.